# புதுமை முயற்சிகளை ஒருங்கிணைக்க தொழில்நுட்ப மையம்

## முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்தார்

**சென்னை, மே 15:** புதுமை முயற்சிகளை ஒருங்கிணைக்க, நாட்டிலேயே முதல் முறையாக, சென்னையில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி மூலம் புதிய மையத்தை அவர் திறந்தார்.

தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவித்தபடி, சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.54.61 கோடி செலவில் இந்த அமைக்கப்பட்டுள்ளது.

**தேவை என்ன?:** இந்த தொழில்நுட்ப மையம், புதுமை முயற்சிகளை மேற்கொள்வதற்கான சூழலை உருவாக்கி ஒருங்கிணைக்கும் மையமாகச் செயல்படும்.



வளர்ந்து வரும் தொழில்நுட்ப முனைவோர்களை ஊக்குவிப்பதுடன், பெரு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஒருங்கிணைக்கும்.

இதன் தொடக்க நிகழ்வின் ஒரு பகுதியாக, 19 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுடன் இணைந்து வழிகாட்டுதல்கள் வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இதற்கான செலவில் மத்திய அரசு 50 சதவீதமும், தமிழக அரசு 37 சதவீதமும் நிதி உதவி அளித்துள்ளது. தொழில் நிறுவனங்கள் 13 சதவீத நிதி பங்களிப்பை செய்துள்ளன.

இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, தகவல் தொழில்நுட்பவியல் துறைச் செயலர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.314 கோடியில் மீனவர்களுக்கான உள்கட்டமைப்புகள்

## முதல்வர் திறந்து வைத்தார்



சென்னை, மே 15: தமிழகத்தில் புதுப்பிக்கப்பட்ட மீன்பிடி துறைமுகம், புதிய இறங்குதளங்கள் உள்பட ரூ.314.89 கோடி மதிப்பிலான உள்கட்டமைப்புத் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை திறந்துவைத்தார்.

இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. காணொலி மூலமாக புதிய கட்டமைப்புகளை அவர் திறந்தார்.

கடலூர் மாவட்டம் முதுநகரில் ரூ.100 கோடி செலவில், மீன்பிடி துறைமுகம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இதேபோல, சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளத்தில் ரூ.5 கோடி செலவில் மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம், உலர் தளம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. கடலூரில் ரூ.5 கோடியில் புதிதாக மீன்வளத் துறைக்காக ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு மற்றும் தெற்கு மீன் இறங்குதளத்தில் ரூ.20 கோடியில் மீன் ஏலக்கூடங்களும், ரோச்மாநகரில் தடுப்புச்சுவர் மற்றும் மீன்ஏலக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளன. மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் ரூ.120 கோடியில் புதிதாக மீன்பிடி துறைமுகமும், கன்னியாகுமரி மாவட்டம் மேலமணக்குடி கிராமத்தில் ரூ.29.50 கோடியில் மீன் இறங்குதளமும், தூத்துக்குடி மாவட்டம் ஜீவாநகர் கிராமத்தில் ரூ.3 கோடியில் மீன் இறங்குதளமும், இனிகோ நகர் மீனவர் குடியிருப்பில் மீன் ஏலக்கூடமும், ஆலந்தலை கிராமத்தில் மீன் இறங்குதளமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், மேட்டூர் அணையில் மாநில மீன்விதைப் பண்ணை, ஈரோடு பவானிசாகரில் அரசு மீன் பண்ணை ஆகியன மேம்படுத்தப்பட்டுள்ளன. தென்காசி மாவட்டம் ராமநதி அரசு மீன்பண்ணையில் சினைமீன் குளங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றையும் முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், கால்நடை, மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ACADEMY

# நடைமுறைக்கு வந்தது 'தினம் ஒரு திருக்குறள்'



சென்னை, மே 15: 'தினம் ஒரு திருக்குறள் இடம்பெற வேண்டும்' என்ற தமிழக அரசின் உத்தரவைத் தொடர்ந்து, தலைமைச் செயலகத்தில் அதற்கான தனி மின் பலகை வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பலகையில், திருக்குறளும், அதற்கான விளக்கமும் இடம்பெற்றுள்ளது.

தமிழகத்தில் அனைத்து அரசு அலுவலகங்களிலும் திருக்குறளும், அதற்கான விளக்கமும் இடம்பெற வேண்டுமென தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, சட்டப் பேரவைச் செயலகம், அரசுத் துறை அலுவலகங்களில் கரும்பலகையில் மட்டுமே திருக்குறளும், அதற்கான விளக்கமும் இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில், தலைமைச் செயலகத்தில் கரும்பலகைக்குப் பதிலாக மின் பலகை பொருத்தப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டடத்தின் நான்காவது நுழைவு வாயிலில் இந்தப் பலகை வைக்கப்பட்டுள்ளது. அதில், திருக்குறளும், அதன் பொருளும் இடம்பெற்றுள்ளது. இத்துடன் ஆங்கில மொழியாக்கம் மற்றும் அதற்கான தமிழ் அர்த்தமும் மின் பலகையில் இடம்பெற்று இருக்கிறது. மிகப்பெரிய ரயில் நிலையங்களில் இருப்பது போன்று பெரிய பலகையில் எண்ம (டிஜிட்டல்) வடிவில் எழுத்துகள் இடம்பெற்றுள்ளன.

# தூய்மைப் பணியாளர்கள் சொந்தவீடு வாங்க மானியத் திட்டம்

சென்னை, மே 15: தூய்மைப் பணியாளர்கள் சொந்த வீடு வாங்குவதற்கு மானியம் அளிக்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ளவர்களில், வீடற்ற 500 பேருக்கு தகுதியின் அடிப்படையில் தலா ரூ.11 லட்சம் மானியம் அளிக்கப்பட உள்ளது.

அவர்களில், ஏழு பேருக்கு மானியம் அளிப்பதற்கான உத்தரவை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்வின் போது முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.



வீடற்ற 500 தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகளை வாங்க மானியம் வழங்குவதற்கான ஆணைகளை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை 7 பேருக்கு வழங்கி தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலத்துறை செயலர் ஜி.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் கே.எஸ்.கந்தசாமி. பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை.

**23 வாகனங்கள்:** முன்னதாக, தலைமைச் செயலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது, தாட்கோ நிறுவனத்தின் சார்பில் மாவட்ட மேலாளர்கள், செயற்பொறியாளர்களின் பயன்பாட்டுக்காக 23 வாகனங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

# விமானப்படை துணைத் தளபதி பொறுப்பேற்பு

**புது தில்லி, மே 15:** விமானப்படையின் துணைத் தளபதியாக ஏர் மார்ஷல் ஆசுதோஷ் தீட்சித் திங்கள்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார்.



ஏர் மார்ஷல் ஆசுதோஷ் தீட்சித்

இந்தப் பொறுப்பில் இருந்த ஏர் மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி கடந்த ஏப்ரல் 30-இல் தென்மேற்கு ஏர் கமாண்டாக நியமனம் செய்யப்பட்டதையொட்டி, ஆசுதோஷ் தீட்சித் அந்த பொறுப்பிற்கு நியமனம் செய்யப்பட்டார். இந்தப் பதவி விமானப்படையின் தளபதிக்கு அடுத்த நிலையில் உள்ள மூன்று நட்சத்திர அதிகாரிக்கான பதவியாகும்.

தேசிய பாதுகாப்பு அகாதெமியில் பயிற்சி பெற்ற தீட்சித், 1986, டிசம்பரில் விமானப்படையில் போர்ப் பிரிவில் சேர்ந்தார். வங்கதேசத்தில் ராணுவக் கல்லூரியிலும், தில்லி தேசிய பாதுகாப்புக் கல்லூரியிலும் பயின்றார். போர் விமானத்தில் போர் வீரர், பயிற்சியாளர், சரக்கு விமானப் பணி என 3,300 மணி நேரங்களுக்கும் மேல் விமானத்தில் பயணித்த அனுபவம் பெற்றவராவார்.

'சேஃப்டு சாகர்', 'ரக்ஷக்' போன்ற ராணுவ நடவடிக்கைகளிலும் பங்கெடுத்தவர் ஆசுதோஷ். விமானப்படை பணியாளர் தேர்வு இயக்குநர், விமானப்படை தலைமையகத்தில் தலைமைத் தளபதிக்கு உதவியாளர் போன்ற பல்வேறு பொறுப்புகளில் இருந்துள்ளார்.